SRI A. VEDARATHNAM: இராப் பள்ளிகளுக்கு வராத பிள்ளைகளை அப்பள்ளிகளுக்கு வரச் செய்வதற்காக அப்பள்ளிகளில் மத்திய உணவு கொடுப்பதுபோல, இராப் பள்ளிகளுக்கு மாணவர்கள் வரும்படி கவர்ச்சி உண்டுபண்ணுவதற்காக அங்கு மாணவர்களுக்கு ஏதேனும் உணவு அளித்தால், பஜனை மடங்களில் சுண்டல் வினியோகம் செய்வதுபோல (சிரிப்பு) ஏதாவது வினியோகித்தால் அங்கு படிக்க நிறைய மாணவர்கள் வருவார்களே. அப்படி ஏதேனும் செய்ய அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சர்க்கார் இதைப்பற்றி ஆலோசிப்பதற்கு முன் கனம் அங்கத்தினர் தம் பகுதியில் இத்திட்டத்தை ஆரம்பித்து நடத்தி இதன் பலன் என்ன என்பதைப்பற்றி சர்க்காருக்குத் தெரிவித்தால், பின்னர் சர்க்கார் இதைப் பரவலாக நடத்தலாமா என்று யோசிக்கலாம்.

SRI N. MARUDACHALAM: கோவையில் முதியோர் கல்வித் திட்டம் நடந்துகொண்டிருந்தபோது அங்கே பகலெல்லாம் வேலை செய்தவர்கள் இரவில் நடக்கும் பள்ளிக்கு வந்து படித்துக் கொண்டிருந்தார்கள். அங்கே இப்போது முதியோர் கல்வித் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். அதை ஏன் நிறுத்தி விட்டார்கள் என்று தெரியவில்லை. சர்க்கார் அங்கே மறுபடியும் அப்பள்ளியைத் துவக்குவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: வயதுவந்தவர்கள் பகலில் வேலைசெய்து களைத்துப்போன நிலையில் அங்கே வரும்போது அவர்களுக்கு உற்சாகம் இருப்பதில்லை. இளைஞர்களுக்காவது உற்சாகம் இருக்குமா என்பதற்காக இளைஞர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிகள் கூடியவரையில் நன்றாக வேலைசெய்துவருவதாகத்தான் சர்க்காரின் கருத்து இருக்கிறது.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO IMMEDIATE SUSPENSION OF EVICTION PROCEEDINGS OF THE TIRUNELVELI DISTRICT BOARD AGAINST THE INHABITANTS OF CHATRAM LAND IN PAVOORCHATRAM, TENKASI TALUK.

MR. SPEAKER: I have received notice under rule 41 from the Hon. Member, Sri D. S. Authimoolam, calling the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, viz., immediate suspension of eviction proceedings of the Tirunelveli District Board against the inhabitants of Chatram land in Pavoorchatram, Tenkasi taluk. The hon. Member Sri Authimoolam will now speak.

III.—POINT OF ORDER *RE* TRANSFER OF STARRED QUESTION TO THE UNSTARRED LIST.

SRI T. S. RAMASWAMI: Sir, on a point of order. My starred question regarding promotions in the Department of Statistics had been transferred to the Unstarred list. I want to know whether it was done at the intance of the concerned department or *suo motu*

29th April 1960] [Sri T. S. Ramaswami]

by the Hon. Speaker. Sir, when I brought the importance of the matter to your notice, you were kind enough to direct me to give notice of a short notice question. . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that the answer is ready and has already been submitted. Perhaps it would be answered to-morrow.

MR. SPEAKER: Even otherwise, how does it become a point of order?

SRI T. S. RAMASWAMI: Sir, before I explain what the point of order is . . .

MR. SPEAKER: The hon. Member must first raise the point of order and then explain it. I must know whether what the hon. Member says is in order.

SRI T. S. RAMASWAMI: Sir, I rise on another point of order. I have been informed by the department that the waiver of notice has been refused. Now the Hon. Minister has given the assurance that it would be answered to-morrow. I want to know which of them stands?

MR. SPEAKER: Whatever it is, it is not a point of order. The hon. Member cannot try to elicit information by raising a point of order. Therefore I rule it out of order.

The hon. Member, Sri Authimoolam will now speak.

II.—CALLING ATTENTION TO IMMEDIATE SUSPENSION OF EVICTION PROCEEDINGS OF THE TIRUNELVELI DISTRICT BOARD AGAINST THE INHABITANTS OF CHATRAM LAND IN PAVOOR CHATRAM, TENKASI TALUK—*cont.*

* SRI D. S. AUTHIMOOLAM: கனம் சபாநாயகர் அவர்களே, நான் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சில ஏழைகளின் ஒரு பிரச்னையைப் பற்றிப் பேச முன்வரும்போது சகுனம் சரியாக இல்லை; (ஒரே சிரிப்பு) கனம் அங்கத்தினர் ஸ்ரீ டி. எஸ். ராமசாமி இரண்டு தடவை பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பிவிட்டார். திருநெல்வேலி ஜில்லா போர்டு நிர்வாகத்தில் பாவூர்சத்திரம் என்ற இடத்தில் 'சத்ரம் லாண்ட்' என்ற எண்டோமெண்ட் இருக்கிறது. அது குடியிருப்பு மனைக்கே லாயக்கான இடம். அங்கே சென்ற 20 வருட காலமாக, ஏழைகள் எக்ரிமெண்ட் எழுதிக்கொடுத்து லைஸென்ஸ் வாங்கி குடியிருந்து வருகிறார்கள். அங்கே சில மனைகள் இருக்கின்றன. இப்போது அங்கே குடியிருக்க சில ஏழைகள் ஜில்லா போர்டாரிடம் அனுமதி கேட்டால் ஜில்லா போர்டார் காலாகாலத்தில் அனுமதி கொடுப்பதில்லை. பிறகு, அங்கே அந்த ஏழைகள் ஏதோ குடிசைகள் கட்டிக்கொண்டு குடியிருந்தால், ஜில்லா போர்டார் "நீங்கள் எங்கள் உத்திரவு இல்லாமல் இங்கே இவைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறீர்கள். இந்த இடத்தைக் காலிசெய்யுங்கள்" என்று சொல்வதுடன் அவர்களைப் ப்ராஸிக்யூஷன் பண்ண நடவடிக்கை எடுப்பதும், அவர்களுக்கு